<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | பிரபாகரன் | நாள் | 05.12.2023 |
| தகப்பனார் பெயர் | கந்தசாமி | | |

**<u>1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

25) வா.சா.ஆ.13 கிரைய ஆவணத்திற்கு மூல ஆவணமாக 1986ம் வருடத்திய J.U.ராமலிங்கத்தின் பெயரிலுள்ள கிரைய ஆவணம் வா.சா.ஆ.13 கிரைய ஆவணத்திலேயே காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.13 மூல ஆவணத்திலேயே மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு செல்வதற்கு தனியாக தடவழி குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

26) மேற்படி வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் J.U.ராமலிங்கத்திற்கு அதில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்த நம்பெருமாள், அவரது மனைவி நல்லம்மாள் மற்றும் அவரது மகன் வெங்கடாஜலம் ஆகியோர்கள் மேற்படி விற்பனை நிலத்தை தவிர தங்களிடம் உள்ள மீதி நிலத்தில் அவ்வாறு மேற்படி விற்பனை நிலத்திற்கு செல்வதற்கு ஏதேனும் தடவழி உரிமையுள்ளதாக மேற்படி வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளனரா என்றால் இல்லை.

27) அதே போல் மேற்படி J.U.ராமலிங்கத்தின் முன் விற்பனையாளர்களுக்கு சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்பது குறித்து வா.சா.ஆ.11 மூல கிரைய ஆவணத்தில் குறிப்பாக எங்கும் சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி ஆவணத்தில் நம்பெருமாளின் மனைவி நல்லம்மாளுக்கு அனுபவப்படியும், சுயார்ஜித கிரையபடி பாத்தியப்பட்டது என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர குறிப்பாக அதன் ஆவண எண் அல்லது பட்டா எண் எதுவும் மேற்படி வா.சா.ஆ.11 மூல கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

28) மேற்படி நல்லம்மாள் J.U.ராமலிங்கத்திற்கு விற்பனை செய்த சொத்தை கடந்த 16.02.1975 ம் தேதியில் R.K.P.கந்தசாமி செட்டி மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றதாக கூறி தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் தான் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்கள்.226/2–ல் 0.31 சென்ட் நிலமும், 226/5–ல் 0.35 சென்ட் நிலமும், 226/6–ல் 0.38 சென்ட் நிலமும், 226/8–ல் 0.44 சென்ட் நிலமும், 227/1–ல் 1320 சதுர அடி நிலமும், மொத்தம் 1 ஏக்கர் 48 சென்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

29) மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தில் P.T.குருநாத செட்டி, மேச்சேரி செட்டி ஆகியோர்களின் நிலங்களின் வடக்கிலும், மாரியம்மன் கோவிலுக்கு மேற்கிலும், கிழமேலாக செல்லக்கூடிய பாதையில் நடைபாத்திய உரிமையுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தடவழி பாத்தியமானது மேற்படி சர்வே எண்கள்.226/2, 226/5, 226/6, 226/8, 227/1 ஆகிய அனைத்து சர்வே எண்களுக்கும் பொதுவானது என்றால், பத்திரத்தில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

30)தற்போது வரை மேற்படி வா.சா.ஆ.9 ல் காட்டப்பட்டுள்ள கிழமேல் தடவழி பாதையானது, ஜலகண்டாபுரத்திலிருந்து ஆடையூர் செல்லும் வழியில் அமைந்துள்ள துருவத்து எல்லை மாரியம்மன் கோவிலுக்கு கிழக்குபுறமாக உள்ள தார்சாலையிலிருந்து மேற்கு நோக்கி சர்வே எண்கள்.226/2, 226/5, 226/6, 226/8, 227/1 ஆகிய சர்வே எண்களுக்கு பாதையாக அமைந்துள்ளது என்றால், பத்திரப்படி அவ்வாறுதான் உள்ளது. ஆனால் தற்போது நிலையில் மேற்படி தடவழியை ஆக்கிரமித்து வீடுகள் கட்டிவிட்டனர்.

31) மேற்படி J.U.ராமலிங்கத்தால் பஞ்சாயத்திற்கு எழுதிகொடுத்ததாக சொல்லப்படும் சர்வே எண்.226/8 ற்கு செல்லும் தாவா வழிபாதை குறித்து மூல ஆவமாண வா.சா.ஆ.9 மூல கிரைய பத்திரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பின்னிட்டுதான் தடவழி உருவாக்கப்பட்டது.

32) 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் பாட்டனார் பழனிசாமி செட்டியார் 29.10.1942 ல் ஆவண எண்.2768/1942 ன் படி, பெருமாள் கவுண்டர் என்பவரிடமிருந்து சர்வே எண்.226/8 லிருந்து தற்போது சர்வே எண்.226/8A வாக உள்ள நிலத்திலிருந்து கிரையம் பெற்ற 0.4 செண்ட் நிலத்தை குறித்து வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் அதன் விற்பனையாளர்களால் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

33) வா.சா.ஆ.9 பத்திரத்தின்படி மேற்படி நல்லமாளுக்கோ அல்லது வேறு எந்த ஆவணத்தின்படியும் என் முன்விற்பனையாளர்களான வையாபுரி, நல்லம்மாள், J.U.ராமலிங்கம் ஆகியோர்களுக்கு நல்லம்மாளின் முன் விற்பனையாளர்களான R.K.P.கந்தசாமி செட்டியார் வகையறாவால் தற்போது சர்வே எண்.226/8A ல் உள்ள நிலத்தை விற்பனை செய்யவில்லை என்ற நிலையிலும், மேற்படி சர்வே எண்ணில் உள்ள 0.4 செண்ட் நிலம் தற்போது வரை 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளிடம் உள்ள நிலையில் மேற்படி நிலத்தில் தடவழி உரிமை அளிக்க என் முன் விற்பனையாளருக்கோ, மேற்படி நிலத்தை தடவழியாக பயன்படுத்த வாதிகளாககிய எங்களுக்கோ சட்டப்படி உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

(1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.